2007 அக்டோபர் 19] [பேராசிரியர் க. அன்பழகன்]

வழங்கப்பட்டுள்ள எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், சலுகைகளையும், தகுதிகளையும் அவர் பெற முடியாது என்றும் இந்த அவை தீர்மானிக்கிறது"

என்னும் இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பொட்டல் கிராமத்தில் கோயில் மண்டபம் இடிந்து, மரணமுற்றோர் மற்றும் காயமுற்றோர் குடும்பத்தினருக்கு நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Mr. Veldurai, என்ன? (குறுக்கீடு)

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். திரு. பா. வேல்துரை சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) நான் கூப்பிடுகிறேன். உட்காருங்கள்.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே கடந்த 14-10-2007 அன்று பொட்டல் என்ற கிராமத்திலே கோயிலுக்கு மண்டபம் கட்டிக்கொண்டிருந்த நேரத்தில் மண்டபம் இடிந்து விழுந்து, நான்கு பேர் உயிரிழந்துவிட்டார்கள்; மூன்று பேர் கடுமையாகக் காயமடைந்துள்ளார்கள். மேலும் 8 பேர் இலேசான காயமுற்று சிகிச்சை பெற்றுத் திரும்பியிருக்கிறார்கள். இறந்து போன நான்கு பேர்களில்

முருகன் என்பவர் பஞ்சாயத்துத் தலைவர்; அவருக்கு வயது 35. சக்திவேல் என்பவருக்கு 17 வயது. இந்த இரண்டு பேர்களும் பொட்டலைச் சேர்ந்தவர்கள். ஆதிமூலப் பெருமாள் என்ற கண்ணன் என்பவர் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்தவர்; சுப்பு என்பவர் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்தவர். இந்த நான்கு பேர்களுமே வயதில் குறைந்தவர்கள். அவர்களுடைய குடும்பத்தார் இன்றைக்குப் பிள்ளைகளோடு, வருமானம் ஏதுமின்றி மிகுந்த கஷ்டமான சூழ்நிலையிலே இருக்கிறார்கள். நான் நேரடியாகச் சென்று பார்த்தேன். பார்த்தபோது, எப்படியாவது அவர்களுக்கு நஷ்ட ஈடு வாங்கித் தாருங்கள் என்று சொன்னார்கள். நமது முதல்வர் அவர்களிடத்திலே நான் சொல்லி, உங்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தருகிறேன் என்று நான் அவர்களிடத்திலே சொன்னேன்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு மனிதனுக்குக் கஷ்டம் என்று வந்தால், அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, எந்த அளவிற்கு உதவி செய்வார்கள் என்பது இந்த மன்றத்திலே இருப்பவர்கள் அனைவருக்கும் தெரியும். அந்த நம்பிக்கையிலே, நான் ஊர் மக்களிடத்திலே கண்டிப்பாக உங்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுத் தருவேன் என்று சொன்னேன். அவர்களுடைய மனைவிமார்களுக்கெல்லாம் 30 வயது, 28 வயதுதான் ஆகின்றது; இளம் வயதிலேயே விதவைகளாகி விட்டார்கள். குழந்தைகள் எல்லாம் சின்ன சின்ன பிள்ளைகள்; 2 வயது, 3 வயதுதான் ஆகின்றது. எனவே, குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற சூழ்நிலை இல்லை; உழைப்பவன் இறந்துவிட்டான். எனவே, நீங்கள் கண்டிப்பாக அந்தக் குடும்பங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாயாவது நஷ்ட ஈடாகத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அதிலே அதிகமாகக் காயம்பட்டவர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாயையாவது நீங்கள் வழங்க வேண்டும். கண்டிப்பாக நீங்கள் வழங்குவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லிவிட்டீர்கள் இல்லையா? உட்காருங்கள்.

திரு. பா. வேல்துரை: எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்த ஏழைப் பெண்களுக்கு ஏதாவது ஒரு வேலை போட்டுக் கொடுத்தால், அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்களை நம்பி, நான் அமர்கிறேன்.

2007 அக்டோபர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இந்த நிகழ்வினை ஏற்கெனவே எனக்கு அவர் நினைவூட்டியிருக்கிறார்; நிச்சயமாக உரிய உதவி வழங்கப்படும். குடும்பங்களுக்கு வழக்கமாகத் தரப்படுகின்ற குடும்ப நல நிதி வழங்கப்படும் என்பதையும், காயம்பட்டவர்களுக்கு சிகிச்சைக்கான செலவுத் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் 2 இலட்சம் ரூபாய் என்று கேட்டார். வழக்கமாக ஒரு இலட்சம் ரூபாய்தான் தருவது. அவர் அவையிலே கேட்ட காரணத்தினால், அவர் கேட்ட 2 இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள்.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையிலேயே அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் என்பது, ஒரு தெய்வம் கொடுத்ததைப்போன்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட காரியத்தைச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

பிற்பகல் 12-20

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1957-ல் என்.எல்.சி. நிறுவனம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய முயற்சியால் அன்றைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களால் கொண்டு வரப்பட்ட நிறுவனம். அது இன்று வரையில்